2025 – ஏப்ரல் மாதம் 15– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 289 / 2023*

*2025–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 1, சாரதா |
| கணவர் பெயர் | : | கோவிந்தராஜ் |
| ஊர் | : | பாண்டகப்பாடி கிராமம், |
| வட்டம் | : | வேப்பந்தட்டை |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 55 |

<u>தேதி: **15.04.2025.**</u>

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகின்றேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் கீழ் கண்ட ஆவணங்களை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**<u>எனது சார்பாக:–</u>**

**1).**06.05.2023–ம் தேதியிட்டு கைகளத்தூர் காவல் நிலைய குற்ற எண் 78 / 2023–ன் கீழ் இதச பிரிவுகள் 279, 337–ன் படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகல் **ம.சா.ஆ.1.**

**2).** பெரம்பலூர் SPT மருத்துவமனையில் 05.05.2023 முதல் 08.05.2023 வரை நான் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று விடுவிக்கப்பட்டதற்கான மருத்துவ விடுவிப்பு சான்று அசல் **ம.சா.ஆ.2.**

3). பெரம்பலூர் SPT மருத்துவமனையில் இருந்து என் பெயருக்கு வழங்கப்பட்ட மருத்துவ பில்கள் 13– எண்ணிக்கைகள் கொண்டது, ரூ.59,573/–க்கானது அசல் **ம.சா.ஆ.3. (2–ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகின்றது).**

4). 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் வாகன காப்பீட்டு நகல் **ம.சா.ஆ.4.**

5). 1–ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ் நகல் **ம.சா.ஆ.5.**

6). எனது ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகின்றது அது **ம.சா.ஆ.6,**

7).எனது ஆதார் அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகின்றது அது **ம.சா.ஆ.7,** ஆக தாக்கல் செய்கின்றேன்.

8). எனக்கு வழங்கப்பட்ட ஊனச்சான்று **நீ.ம.சா.ஆ.1** ஆகும்.

எனது சாட்சியம் மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுப்படி உத்தரவாக வேண்டுகின்றேன்.

**குறுக்கு விசாரணை:– (2–ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்து நடந்த தேதி 06.05.2023 ஆகும். விபத்து குறித்து நான் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தில் எனக்கு பின்னால் தனலெட்சுமியும், பிரியங்காவும் உட்கார்ந்து சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லையென்றால் சரியல்ல, எனது ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்துள்ளேன்.நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் எனக்கு சொந்தமானது அல்ல, தனலெட்சமி என்பவருக்கு சொந்தமானது ஆகும். விபத்தில் பிரியங்காவிற்கும், தனலெட்சுமிக்கும் அடிபட்டுள்ளது என்றால் சிராய்ப்புக்காயங்கள் ஏற்பட்டிருந்தது. அவர்கள் இருவரும் என்னுடன் அரசு மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் சரிதான். நான் அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை. அரசு மருத்துவமனையில் அன்று மதியம் 02.00 மணியளவில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு பின்னர் இரவு 08.30 மணியளவில் பெரம்பலூர் எஸ்பிடி மருத்துவமனையில் வலி அதிகமானதால் சிகிச்சைக்கு சேர்ந்தேன். பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் என் பெயரில் வழங்கப்பட்ட காயச்சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். அதே போல் எஸ்பிடி மருத்துவமனையிலும் என் பெயரில் வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். பெரம்பலூர் எஸ்பிடி மருத்துவமனையில் 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். அதன் பின்னர் நான் வேறு எங்கும் சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லையென்றால் வீட்டிற்கு சென்ற பிறகும் நான் அங்கு சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அவ்வாறு நான் தொடர் சிகிச்சை மேற்கொண்டதற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. எனக்கு வழங்கப்பட்ட அசல் மருத்துவ பில்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் ஒரு பில் மட்டும் தொலைந்து விட்டது அதற்கான நகலை மருத்துவரிடம் இருந்து பெற்று தாக்கல் செய்துள்ளேன் மற்ற பில்கள் அனைத்தும் அசல் பில்களாகும். மருத்துவ பில்களை வழங்கிய அதிகாரியை அழைத்து விசாரித்தால் நான் மருததுவ காப்பீட்டின் கீழ் காப்பீடு பெற்றுள்ளேனா, இல்லையா என்று தெரியவரும் என்றால் அழைத்து விசாரித்துக்கொள்ளாலாம். அந்த மருத்துவ அதிகாரியை அழைத்து விசாரிக்க தயாராக உள்ளேன். குற்ற இறுதி அறிக்கையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அந்த குற்ற இறுதி அறிக்கையில் எனக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பக்காயங்கள் என்று முடிவு செய்யப்பட்டுள்ளதால் அந்த குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. விபத்து நடந்த இடம் பெரியாண்டார் கோவிலுக்கு முன்புறம் ஆகும். அந்த சாலை ஒரு குறுகிய சாலை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் மூன்று

நபர்களை ஏற்றிக்கொண்டு எனது வாகனத்தின் கட்டுப்பாட்டை இழந்து, கீழே விழுந்து நானாகவே விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. இந்த விபத்தில் 1–ம் எதிர்மனுதாரர் வாகனம் ஈடுபடவே இல்லையென்றும், இழப்பீடு பெறவேண்டும் என்ற எண்ணத்தில் போலீசாருடன் கூட்டு சேர்ந்து 1–ம் எதிர்மனுதாரர் மீது வழக்கு பதிவு செய்து அதன் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வருமானத்தை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் பூரணமாக குணம் அடைந்து விட்டது என்றாலும், அதனால் அசௌகரிய குறைபாடோ, ஊனமோ ஏற்படவில்லையென்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. நான் ஓட்டிச்சென்ற வாகனத்திற்கு செல்லத்தக்க காப்பீடு இல்லையென்பதால் தான் 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு சொந்தமாக நிலங்கள் உள்ளது. அதில் நான் விவசாயம் செய்து வந்தேன், தற்போது வேலை செய்ய முடியவில்லை. நான் தற்போதும் விவசாயம் செய்து கொண்டு தான் இருக்கின்றேன் என்றும், விவசாய நிலங்களில் விவசாயம் செய்ய முடியவில்லையென்று வேறு நபரிடம் கொடுத்து விவசாயம் செய்து வருகின்றேன் என்றால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரரின் வாகனம் இந்த விபத்தில் ஈடுபடவில்லையென்பதால் 2–ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:– இல்லை.</u>**

**ஒப்பம்/– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**